சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்

**O.S. No. 65/2019**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13ம் நாள் வெள்ளிக்கிழமை மனுதாரர்/வாதிதரப்பு சாட்சியமாகிய **செல்வம் PW4** வாக்குமுலம் 1869 ஆம் ஆண்டின் 44வது சட்ட விதிகளின்படி /ஏற்பாட்டின்படி **திருமதி.S.இந்திராகாந்தி, எம்.எல்.**, சார்பு நீதிபதி, நாகப்பட்டினம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது /பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | செல்வம் | வயது |
| தகப்பனார் பெயர் | | கிராமம் |
| கணவர் பெயர் | | தாலுக்கா |
| தொழில் | | |

13.02.2026

**முதல் விசாரணை**

நான் வேதாரண்யம் தாலுக்காவில்நிலஅளவைத்துறை துணை ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்ததன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். யூடிஆர் எப்எம்பியில் 87/16, 87/3ஏ1, 87/3ஏ2, 87/15, 87/5, 87/6, 87/9, 87/10பி, 87/12சி ஆகிய புல எண்கள் வண்டிப்பாதைக்குரிய குறியீடாக விளக்கி காண்பிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட புல எண்களுக்குரிய வண்டிப்பாதை விளக்கிக்கான நீளம் 120 மீட்டர் ஆகும். வண்டிப்பாதைக்குரிய விளக்கியாக கூறப்பட்டுள்ளதால் அதன் அகலம் 4 மீட்டருக்கு உட்பட்டே இருக்க வேண்டும் என்பது நிலஅளவை விதியாகும். பன்னாள் கிராமத்திற்கான கிராம வரைபடத்தில் 84,88 ல் வண்டிப்பாதை இருப்பதற்கான விளக்கி குறிப்பிடப்பட்டுள்ளது.

**1,2, பிரதிவாதிகள் தரப்பிலான குறுக்கு விசாரணை**

யூடிஆர் FMBல் புல எண்.84,88 வண்டிப்பாதைக்குரிய விளக்கி கூறப்படவில்லை. தற்போதுவரை யூடிஆர் நடைமுறையில் இருந்து வருகிறது. விளக்கி என்பது நிலஅளவை சட்டத்தை பொறுத்தவரை

பூமியில் இருக்கின்ற நிலையான அமைப்புகளை வரைபடத்தில் குறிப்பிடுவதற்காக உரிய குறியீடு ஆகும்.



தாவா இடத்தை நான் ஆவணங்களின் அடிப்படையில்தான் தெரியும் என்றால் நான் 11.02.2026 அன்று கிராம நிர்வாக அலுவலர் ஆவணங்களை கொண்டு கள ஆய்வு செய்தேன். நான் 11.02.2026 அன்று ஸ்தல ஆய்வு செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**18,19,20,21 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்

**O.S. No. 65/2019**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13ம் நாள் வெள்ளிக்கிழமை மனுதாரர்/வாதிதரப்பு சாட்சியமாகிய **கார்த்திகா PW3** வாக்குமூலம் 1869 ஆம் ஆண்டின் 44வது சட்ட விதிகளின்படி /ஏற்பாட்டின்படி **திருமதி.S.இந்திராகாந்தி, எம்.எல்**., சார்பு நீதிபதி, நாகப்பட்டினம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது /பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | **கார்த்திகா** | வயது |
| தகப்பனார் பெயர் | | கிராமம் |
| கணவர் பெயர் | | தாலுக்கா |
| தொழில் | | |

13.02.2026

**முதல் விசாரணை**

நான் பன்னாள் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்ததன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனக்கு வந்த அழைப்பாணையில் உள்ள சர்வே எண்.87/12சி, 87/10பி , 87/9, 87/6, 87/5, 87/3ஏ2, 87/3ஏ1, 87/15, 87/14 மேற்கண்ட புல எண்களில் கிராம சாலை என்று ஒரு பாதை காண்பிக்கப்பட்டுள்ளது. கிராம வரைபடம்அசலுடன் ஒப்பிடப்பட்டது. அது **நீ.ம.சா.ஆ.1** ஆகும். 1982ம் ஆண்டு உள்ள கிராம வரைபடத்தில் மேற்கண்ட சர்வே எண்களில்

வீடுகளும், வண்டிப்பாதையும் காண்பிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சர்வே எண்களில் 6 வீடுகள் உள்ளது. 6 வீடுகளுக்கும் மேற்கண்ட சர்வே எண்களில் உள்ள பாதைதான். வேறு பாதை இல்லை. மேற்கண்ட சர்வே எண்களுக்கு பின்புறம் வசிப்பவர்கள் இந்த பாதையை உபயோகிப்பார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

**1,2, பிரதிவாதிகள் தரப்பிலான குறுக்கு விசாரணை**

புல எண்.84,88 புல வரைபடத்தில் பொதுப்பாதை கிடையாது என்றால் 84ல் FMBல் உள்ளது, யூடிஆரில் 84, 88ல் இல்லை. ஆனால் உபயோகத்தில் ஒரு பாதை உள்ளது. மேற்கண்ட ஆறுவீடுகளும் அவரவர்கள் பட்டா நிலத்தில் வீடு கட்டியுள்ளார்கள்.



அதே பட்டா நிலத்தில்தான் பொதுப்பாதையும் உள்ளது. மேற்கண்ட ஆறு நபர்கள் பெயர் 1. அய்யாத்துரை, 2. கண்ணதாசன், 3. கந்தசாமி, 4. சேகர், 5, ஆனந்த், 6. மாலாவதி ஆகியோர்கள் ஆவார்கள். அவர்கள் வீடுகளுக்கு வேறு பாதை கிடையாது.

**18,19,20,21 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்

**<u>O.S. No. 65/2019</u>**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13ம் நாள் வெள்ளிக்கிழமை மனுதாரர்/வாதிதரப்பு சாட்சியமாகிய **ராமநாதன் PW2** வாக்குமுலம் 1869 ஆம் ஆண்டின் 44வது சட்ட விதிகளின்படி /ஏற்பாட்டின்படி **திருமதி.S.இந்திராகாந்தி, எம்.எல்.**, சார்பு நீதிபதி, நாகப்பட்டினம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது /பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | ராமநாதன் | வயது |
| தகப்பனார் பெயர் | | கிராமம் |
| கணவர் பெயர் | | தாலுக்கா |
| தொழில் | | |

13.02.2026

முதல் விசாரணை

எனக்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்ததன் அடிப்படையில் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன். பண்டரிநாதன், தனசாமி, ராஜேந்திரன் ஆகியோர்களை எனக்கு தெரியும். கந்தசாமி, பத்மாவதி ஆகியோர்களையும் தெரியும், நான் வாதிகள், பிரதிவாதிகளுக்கு உறவினர் ஆவேன். வாதிகள், பிரதிவாதிகள் குடியிருந்து வரும் வீட்டிற்கு அருகே பொதுப்பாதை உள்ளது. அந்த பாதையை பண்டரிநாதனின் அப்பா கோவிந்தவாமி தேவர் பண்டரிநாதன் திருமணத்தின்போது ரோட்டை போட்டார். 15 குடும்பங்கள் அந்த பொதுப்பாதையை பயன்படுத்தி வருகிறார்கள்.

**1,2, பிரதிவாதிகள் தரப்பிலான குறுக்கு விசாரணை**

பண்டரிநாதனுக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்று எனக்கு தெரியாது. தாவா ரோட்டை அரசாங்கம் போடவில்லை. தாவா ரோட்டிற்கு பக்கத்தில் மெயின்ரோடு உள்ளது என்றால் சரிதான்.

**18,19,20,21 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**